1978 செப்டம்பர் 14] [திரு.ப.குழந்தைவேலு]

விட்டது. அவ்வாறு குறைந்த காரணத்தால் பாசனத்திற்கு நீர் வழங்குவதை நியாயமான விதத்திலே டர்ன் சிஸ்டம் என்ற வகையிலே முறைப்படுத்திக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். பயிர் வாடவில்லை, பயிர் பட்டுப்போய்விட்டது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். பயிர் வாடாமல் எப்படிப் பட்டுப்போகும் என்று எனக்குத் தெரியவில்லை. பயிர்களைப் பாதுகாப்பதற்காக வேளாண்மைத் துறை பொறுப்பாகவும் அதேபோல் பாசனத் துறை பொறுப்பாகவும் இந்த அரசும் பொறுப்பாகவும் இருப்பதால் அவைகள் பட்டுப்போகாத நிலையில் மீண்டும் தண்ணீர் வசதி செய்து கொடுக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(எ) கல்லணையிலிருந்து பட்டுக்கோட்டை கடைமடைப் பகுதிகளுக்கு தண்ணீர் கிடைக்காமை.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து, திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, ''மேட்டூர் அணையில் நீர் நிரம்பிய நிலையிலும், பட்டுக் கோட்டை பகுதி கிருஷ்ணபுரம், பழவேற்காடு, ஒதியடிக்காடு, தம்பிக்கோட்டை மேற்கு, தம்பிக்கோட்டை வடக்கு, கல்யாணஓடை, அத்திவெட்டி கிராமங்களில் தண்ணீர் கிடைக்காத காரணங்களால் நாற்றங்கால்கள் பாழடைந்து சாகுபடி வேலைகள் சீர்குலைந்துவிட்ட காரணத்தாலும் அக் கிராமங்களில் உள்ள விவசாயிகள் உண்ணாவிரத போராட்டம் நடத்தப் போகும் நிலையில் அப்பகுதியிலுள்ள பதட்ட நிலையை குறித்த'' பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, கல்லணை பாசனத்திற்கு திறந்த நாள் முதல் கல்லணைக் கால்வாயில் முழு அளவு பாசன நீர் விடப்படுகிறது. மேலே சொன்ன கிராமங்களுக்குப் பாயும் வாய்க்கால்களில் பாசன நீர் கடைமடைப் பகுதி வரை சென்று கொண்டிருக்கிறது. எனினும் இப்பகுதியில் வறட்சி மற்றும் மழையின்மையால், நாற்று நடவு, துரிதமாக நடப்பதற்கு பாசனத் தண்ணீர் போதுமானதாக இல்லை. ஆனால், தற்போது பெய்த மழை அனுசரணையாக இருப்பதால் நாற்று நடவு வேகமாக நடப்பதற்கு தற்போது கிடைக்கும் பாசன நீர் போதுமானதாக உள்ளது.

திரு. மு. அம்பிகாபதி: தலைவர் அவர்களே, கல்லணைக்கால்வாய் விஷயமாகவும், வடவாறு விரிவாக்கக் கால்வாய் விஷயமாகவும் 9—9—1978 ஆம் நாளன்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நாங்கள் விண்ணப்பம் கொடுத்திருக்கிறோம். அங்கே இருக்கின்ற வடிகால் பிரச்சினை பட்டுக்கோட்டை தாலுகா,

மன்னார்குடி தாலுகா ஆகிய பகுதிகளில் உள்ள கிருஷ்ணபுரம், பழவேற்காடு, ஓதியடிக்காடு, தம்பிக்கோட்டை மேற்கு, தம்பிக்கோட்டை வடக்கு, கல்யாண ஓடை, அத்திவெட்டி, திருமக்கோட்டை, இளவக்குறிச்சி, வாவாஜிக்கோட்டை ஆகிய பகுதிகளிலே சரியான பாசன முறை கிடையாது. கடந்த முறை நான் இது குறித்து கவன ஈர்ப்புக் கொடுத்தபோது அமைச்சர் அளித்த பதில் பற்றி திருமக்கோட்டையிலே கொந்தளிப்பான நிலைமை ஏற்பட்டது. தந்தியெல்லாம் வந்தது, ஆகவே அந்தப் பகுதிகளுக்குத் தண்ணீர் கிடைக்கக்கூடிய முறையிலே கால் வாய்ப் பகுதிகளை விரிவுபடுத்த அமைச்சர் அவர்கள் தனிக்குழு அமைத்து திட்டமிட முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கிருஷ்ணபுரம், பழவேற்காடு, ஓதியடிக்காடு, தம்பிக்கோட்டை மேற்கு, தம்பிக் கோட்டை வடக்கு, கல்யாண ஓடை, அத்திவெட்டி கிராமங்கள் கடைமடைப் பகுதிகளாகும். அந்தக் காரணத்தாலும் அங்கே வறட்சி இருப்பதாலும் மழையின்மையாலும் சரிவர நாற்றுகள் நடமுடியாத சூழ்நிலை இருந்தது. ஆனால் சமீபத்தில் பெய்த மழையின் காரணமாக நாற்று நடவு நடந்து கொண்டிருக்கிறது, மேலும் பாசனத்துறை மூலமாகவும், வேளாண்மைத் துறை மூலமாகவும் வேண்டிய தண்ணீரைக் கொடுக்க வழிவகை செய்யப் பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஏ) சிதம்பரம் வட்டத்தில் பாசன மதகுகள் சிலரால் இடிக்கப்பெற்றது குறித்து.

திரு. துரை கலியமூர்த்தி : தலைவர் அவர்களே, "10—8—1978 அன்று சிதம்பரம் வட்டம், குமராட்சி பகுதியில் முள்ளங்குடி என்ற ஊரில் உள்ள பாசன கொண் டத்தையும், அருகில் உள்ள பருத்திக்குடி என்ற ஊரில் உள்ள பாசன கொண்டத்திலும் உள்ள சிமிட்டு கொண்டங்களை கீழ் முகத்திலுள்ள மக்கள் 50 பேர்களுக்கு மேலாக கூட்டமாகச் சென்று இடித்துள்ளனர். அரசு சார்பில் 6 பேர்களைக் கைது செய்யவே, கைது செய்யப்பட்டவர்கள் சார்பாக மக்கள் கூட்டம் கூடி போராட்டம் செய்து 6 பேர்களையும் விடுதலை செய்துள்ளனர். உடைக்கப்பட்ட கொண்டங்களை மேற்படி 6 பேர்களும் கட்டித் தரவேண்டும் என்று ஆர்.டி.ஓ. கூறியுள்ளார். ஆனால் இதுவரை மேல் நடவடிக்கை எதுவுமில்லாதால் பாசன நிலங்கள் பாதிக்கப்பட்டு அங்கு மக்களிடையே பெரும் பதட்ட நிலை உருவாகியுள்ளது" குறித்த அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, சிதம்பரம் வட்டத்தில் பொதுப்பணித்துறை குமராட்சி பிரிவின் பராமரிப்பில் உள்ள வடக்கு ராஜன் வாய்க்காலில்